| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>சேகர் | அ.வ.எண். 58/2005 | 04.12.2024 |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

5) நான் சொல்லும் அறகொடையில் முன்னால் தலைவர் பெயர் என்ன என்றால் ராஜரெத்தினமாகும். தற்போது நீதிமன்றத்தில் உள்ளவர் 3ம் பிரதிவாதி ஆவார். 3ம் பிரதிவாதியை தவிர வேறு யாரேனும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்களா என்றால் இல்லை. ஆதியில் நான், ராஜகோபால், தட்சிணாமூர்த்தி, ராஜரெத்தினம் ஆகியோர் அனைவரும் சேர்ந்து தான் தாவாவில் குறிப்பிட்டுள்ள தர்மத்தை நடத்தி வந்தோம் என்றால் சரிதான். ராஜரெத்தினம் பொதுகுழுவில் பிரச்சனை செய்தார் என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்லும் அறகொடை சம்மந்தமாக உரிய ஆயத்தில் இன்னார் தான் டிரஸ்டி என்று ஏதேனும் ஆவணம் முத்திரையுடன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள அறகொடை சம்மந்தமாக எந்த தேதி, மாதம், வருடம் கூட்டம் நடைபெற்றது என்றால் ஞாபகம் இல்லை. கூட்டம் நடத்துவது சம்மந்தமாக உரிய ஆயத்தில் முத்திரையுடன் ஏதேனும் ஆவணம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை, கோவிலுக்கு வரச்சொல்லி நாங்களாக கூட்டம் நடத்தி கொள்வோம். எந்த கோவிலுக்கு வரச்சொல்வோம் என்றால் தா.பேட்டை காமாட்சியம்மன் கோவிலுக்கு வரச்சொல்லி கூட்டம் நடத்துவோம். மேற்படி காமாட்சியம்மன் கோவிலில் கூட்டம் நடத்தியது சம்மந்தமாக உறுப்பினருக்கு கடிதம் அனுப்பியதை பொறுத்து என் வசம் எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான்.

6) 26.09.2004 ல் என்னை தலைவராக தேர்ந்தெடுத்தது சம்மந்தமாக நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் நான் தான் தலைவர் என்று சொல்லியுள்ளேன், ஆனால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ராஜகோபால் தலைவர் என்று கண்டுள்ளது என்றாலும், இருவரில் யார் தலைவர் என்றால் கொஞ்சம் காலம் நான் தலைவராக இருந்தேன், அதற்கு பின்னிட்டு நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன், தற்போது ராஜகோபால்தான் தலைவராக உள்ளார். நான் ஒரு காலத்திலும் தலைவராக இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக தலைவராக இருந்ததாக சொல்கிறேன் என்றாலும், அதன் காரணமாக தான் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ராஜரெத்தினம் எந்த ஊரிலிருந்து இறந்தார் என்றால் தா.பேட்டையில் தான் இறந்தார். மேற்படி ராஜரெத்தினம் எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. தோராயமாக 10 ஆண்டுகள் இருக்குமா என்றால் 15 ஆண்டுகள் இருக்கும். மேற்படி ராஜரெத்தினம் இருக்கும்வரை தா.பேட்டையில் போடும் கூட்டங்களில் கலந்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி ராஜரெத்தினத்தின் இறப்பு சடங்கில் நான், ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். ராஜரெத்தினம் நான் சொல்லும் அறகொடைக்கு எதிராக எந்த செயலும் செய்யவில்லை என்றாலும், அறகொடைக்கு ஆதரவாக தான் செயல்பட்டு வந்தார் என்றாலும் சரியல்ல, ஆரம்பத்தில் சாதகமாக தான் இருந்தார், அதற்கு பின்னிட்டு அவ்வாறு இல்லை.

7) மேற்படி ராஜரெத்தினம் வாதிக்கு ஆதரவாக கூட்டு சதி செய்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நானும், ராஜகோபாலும், மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து தான் வாதிக்கு எதிராக சதி செய்துவருகிறோம் என்றால் சரியல்ல. நான் 3,4 பிரதிவாதிகளாகிய ராஜகோபால் மற்றும் தட்சிணாமூர்த்தி ஆகியோருக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சமயபுரம் மாரியம்மன் கோவில் வெள்ளி குதிரை வாகனம் தேருக்கு முந்தைய நாள் நடக்கும் என்றால் சரிதான். சித்திரை மாதம் முதல் செவ்வாய் தேர் என்றாலும், அதற்கு முந்தைய தினம் தான் வெள்ளி குதிரை வாகனம் உற்சவம் நடக்கும் என்றாலும் சரிதான். கடைசியாக வெள்ளி குதிரை வாகனம் தாவா சொத்தில் நல்ல முறையில் நடைபெற்று நாங்கள் தர்மங்களை செய்தோம் என்றால் சரிதான். மேற்படி உற்சவத்தின் போது மருதமுத்து மகன் மணிகண்டன் எங்களுக்கு எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றாலும், எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்தார் என்றாலும் சரிதான். வாதிகள் தங்களது பின்னிட்ட வாடகையை கொடுத்து எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்தால் நாங்கள் வாதிக்கு எந்த தொந்தரவும் செய்யமாட்டோம் என்றால் வாதி தாவா சொத்தை காலி செய்துகொடுக்க வேண்டும். வாதிகள் தாவா சொத்தை காலி செய்து கொடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக தான் அ.வ.எண்.55/2016 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.55/2016 ல் சொல்லியுள்ள வழக்கு சொத்தும், இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்தும் ஒரே சொத்து தான் என்றால் சரிதான். எனது பெயர் சேகரா அல்லதா சேகர் (எ) சந்திரசேகரா என்றால் சேகர் (எ) சந்திரசேகர் ஆகும்.

8) எனது ஆதார் அட்டையில் எனது பெயர் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சேகர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் எனது ஆதார் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். வாரி சந்து, கடை வீதி ஆகியவை தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள ரோட்டை குறிக்கும் என்றால் சரிதான். ரோட்டுக்கு ஒட்டிய தென்புறம் வெள்ளி குதிரை வாகனம் இறக்குவதற்காக காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். மேறப்டி காலியிடத்திற்கு ஒட்டிய தென்புறம் தற்போது என்ன உள்ளது என்றால் காலியாக தான் இருந்தது, தற்போது செட் போட்டுள்ளார்கள். மேற்படி செட் போட்டுள்ளத்தற்கு ஒட்டிய தென்புறம் உள்ள மேற்கூரை ஆஸ்பெட்டாஸ் சீட்டா அல்லது கூலிங் சீட்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் அந்த இடத்திற்கு போகவில்லை. நான் சொல்வது போல் தாவா சொத்து குடும்ப சொத்துகிடையாது என்றாலும், விஸ்வபிராமண இனத்தின் டிரஸ்ட் சொத்துகிடையாது என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் தர்ம காரியம் செய்துவருவதாக சொல்லியுள்ளதை பொறுத்து தனிக்கை அறிக்கை எதுவும் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் நன்கொடை எதுவும் வசூல் செய்யவில்லை என்றாலும், தர்ம காரியம் எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, வசூல் செய்து தான் செய்தோம். நான் வசூல் செய்தது சம்மந்தமாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக வசூல் செய்ததாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9) நான் சொல்வது போல் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் வழக்கு சொத்தை பராமரிக்கவில்லை என்றாலும், நிர்வாகம், தலைவர், நிர்வாக குழு என்று தேர்ந்தெடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் 26.09.2004 ல் எந்த பொதுகுழுவும் நடைபெறவில்லை என்றாலும், அது சம்மந்தமாக புத்தகத்தில் எந்த கையொப்பமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் எந்த விரோதமும் இல்லை என்றாலும், அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதிகள் கோரும் சுவாதீனம் என்று எதுவும் கிடையாது என்றாலும், நான் தான் சுவாதீனம் கேட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. 1979 ல் ராஜரெத்தினம் தான் மருதமுத்துவிடம் தாவா சொத்துக்களை ஒப்படைத்தார் என்றால் சரிதான். மேற்படி ராஜரெத்தினம் தாவா சொத்தை ஒப்படைக்கும் போது ராஜரெத்தினத்திற்கும், மருதமுத்துவிற்கும் இடையே என்ன பேசப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ராஜரெத்தினம் மாதம் ரூ.100 வாடகைக்கு மருதமுத்துவை வாடகைதாரராக நியமனம் செய்தார் என்றால் சரியல்ல, பார்த்து கொள்ளச்சொல்லி தான் சொன்னார். மருதமுத்துவிற்கும், ராஜரெத்தினத்திற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக வாடகை ஒப்பந்தத்தை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருதமுத்து மற்றும் அவரது வாரிசுகள் காலத்திற்கு பின்னிட்டு பேரூராட்சி வரிகளை செலுத்தியும், வெள்ளி குதிரை வாகனம் புறப்பாட்டு செலவுகள் செய்தும் மற்றும் அன்னதானத்திற்குண்டான செலவுகளை செய்தும் வாடகையை சரி செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல.

10) நாங்கள் தான் மேற்படி செலவுகை செய்துவருகிறோம். வழக்குரையில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த பேரூராட்சிக்கு செலுத்திய வரி ரசீதுகள், வெள்ளி குதிரை வாகனத்திற்கு செலுத்திய தொகையை பொறுத்து ரசீதுகள் ஆகியவற்றை வாங்கி பார்த்தேனா என்றால் வாங்கி பார்த்தேன். மேற்படி பேரூராட்சிக்கு வரி மற்றும் வெள்ளி குதிரை வாகனத்திற்கான செலவு ஆகியவற்றை வாதிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடாது என்று பேரூராட்சிக்கு அல்லது சமயபுரம் திருக்கோவில் நிர்வாகத்திற்கு நாங்கள் எந்த ஆட்சேபனை கடிதமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிகள் வாடகையை நேர் செய்துகொள்கிறார்கள் என்ற காரணத்திற்காக தான் நாங்கள் எந்த ஆட்சேபனை கடிதமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 2005 மற்றும் வழக்கு நிலுவையில் இருக்கும் போது மருதமுத்து மற்றும் அவரது வாரிசுகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்களை காலி செய்ய முயற்சி செய்தேன் என்றால் அந்த சமயத்தில் நான் இல்லை, ராஜகோபால் தான் பார்த்து கொண்டார். தாவா சொத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது குறித்து நான் கேள்விபட்டேனா என்றால் இல்லை. நான் தொடர்ச்சியாக இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும், அதற்கு பின்னிட்டும் தொடர்ந்து வாதிகளை காலி செய்ய நான் முயற்சி செய்ததால் வருவாய் துறையில் ஆவணங்கள் பரிசீலனை செய்ய வாதிகள் நிர்பந்திங்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பழைய கதவு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது.

11) வாதிகளுக்கு எதிரான எனது செயல்பாட்டின் காரணமாக வாதிகள் வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்தபோது தாவா சொத்து 97/1 மற்றும் 97/2 சர்வே எண்களில் இனாம் புஞ்சை வகைப்பாட்டில் அ/மி கருப்பண்ணசாமி கோவில் சொத்து என்று பதிவாகியுள்ளதை கண்டார்கள் என்பதை பற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி கருப்பண்ணசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ராஜரெத்தினம் 1ம் வாதியை தவறாக வழிநடத்தி வாடகைதாரராக குடி வைத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கீழ்புறம் சித்த வைத்தியசாலை இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் கருப்பண்ணசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் மேற்படி கருப்பண்ணசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பாக்கியத்தம்மாள் பெயரில் ஏற்பட்ட பத்திரம், தான பத்திரம் மற்றும் ரத்து பத்திரம் ஆகியவைகள் எங்களால் சுயமாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த நீதிமன்றத்திலும், அ.வ.எண்.55/2016 வழக்கிலும் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்த உண்மை தெரிந்துவிடும் என்ற காரணத்திற்காக அதனை தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இனாம் சொத்துக்களை பொறுத்தவரை வருவாய் துறை ஆவணங்கள் தான் மூல ஆவணங்கள் என்றால் சரியல்ல. இனாம் சொத்து என்று ஒப்புக்கொண்டு தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் கதவு எண்ணுக்கும், பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் 2 ரசீதுகளில் குறிப்பிட்டுள்ள கதவு எண்ணுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

12) பேரூராட்சிக்கு உரிய ஆயத்திலிருந்து எந்த ஆவணமும் வாங்கி நான் தலைவர் என்பதை நிரூபிக்க தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் சொன்ன குறிப்பின் அடிப்படையில் தான் பேரூராட்சியில் ரசீது வழங்கி வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 முதல் 6 வரையுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு வழக்கு நடவடிக்கையை மறைத்து பேரூராட்சியில் எனது செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி ஆவணங்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் ரசீதின் பின்புறத்தில் உள்ள குறிப்புகளை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணங்களை வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் 2 வது ரசீதில் யார் ஒயிட்னர் போட்டு திருத்தம் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பெயருக்கும், நான் குறிப்பிடும் பெயருக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் தவறான ஆதாயம் அடைய வேண்டும் என்பதால் இணைய வழி ரசீதில் கையால் எழுதி திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணம் நாங்களாக அடித்தது என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள அறக்கட்டளை பெயர் எதுவும் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கிற்காக திட்டமிட்டு தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 2 வது ஆவணத்தில் கையெழுத்தில் வரைபடம் வரைந்துள்ளது யார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13) நான் அவசர கதியில் தயார் செய்து பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணம் நாங்கள் தான் அடித்து தாக்கல் செய்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை கொடுத்து தனிக்கை துறையில் எந்த சான்றும் பெறவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 9 ஆவணத்தில் பஞ்சபிரகார விழா அல்லது வெள்ளி குதிரை வாகன விழா என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் 2 வது ஆவணத்தில் கையால் எழுதி குறிப்பிட்டுள்ள தொலைபேசி எண் யாருடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.9 ஆவணம் வழக்கிற்காக அவசர கதியில் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியை சட்ட புறம்பாக தாவா சொத்திலிருந்து காலி செய்ய முகாந்திரம் இல்லை என்றாலும், அவர்கள் சுவாதீனத்தை இடையூறு செய்ய எனக்கு உரிமையில்லை என்றாலும், வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.